| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி.சித்ரா | அ.வ.எண். 290/2018 | 06.04.2026 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) அ.வ.எண்.325/2017 வழக்கில் பேரூராட்சி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு எனக்கும், தங்கவேலு என்பவருக்குமான தனிப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்படி தங்கவேலுக்கு சொந்தமான புல எண்.318/37 ஐ பொறுத்து அளவீடு செய்யப்பட்டு, வா.சா.ஆ.9 அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதில் புல எண். 318/37 மற்றும் 318/36 ம் அளக்கப்பட்டுள்ளது.

2) புல எண்.318/33 தெரு பகுதியை நான் ஆக்கிரமிப்பு செய்ததாகவே பேரூராட்சியில் இருந்து எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், தங்கவேலுக்கும், எனக்கும் உள்ள தனிப்பட்டபிரச்சனையில் மேற்படி தங்கவேலுவின் தூண்டுதலின் பேரிலேயே மேற்படி அறிவிப்பை எனக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3) நான் சொல்வது தவறு என்றாலும், புல எண்.318/33 தெரு பகுதியை நான் ஆக்கிரமிப்பு செய்தததாக வருவாய் வட்டாட்சியர் அளந்து அத்து காட்டிய பிறகே எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது சொத்தை மட்டும் அளவீடு செய்தது உண்மை, ஆனால் நான் தெரு பகுதி எதுவும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

4) வா.சா.ஆ.9 ஆணையர் அறிக்கை இவ்வழக்கிற்கும், எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் சொல்வது போல் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை எனில் நீதிமன்ற ஆணையர் மூலம் எனது சொத்தையும், மேற்படி தெரு பகுதியையும் அளவீடு செய்திருப்பேன் என்றால் சரியல்ல, முன்னதாக 6 முறை

அளக்கப்பட்டுள்ளது.

5) புல எண்.318/33 ல் 7 சதுர மீட்டர் அளவுள்ள பகுதியை நான் ஆக்கிரமிப்பு செய்ததாக அளவீடு செய்யப்பட்ட பிறகே எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய தாவா தாக்கல் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.